# முஸ்லிம் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் பாடசாலை நூலகங்களின் பங்களிப்பு: கம்பஹா மற்றும் மினுவாங்கொட கல்வி வலயங்களை மையப்படுத்திய ஆய்வு

**MYF.Naufiya [1], MH.Husna [2], Dr.SMM.Nafees [3]**

[1&2]Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language, SEUSL

[3]Lecturer, Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language, SEUSL

binthyusuf94@gmail.com,husnarabi94@gmail.com,

drsmmnafees@gmail.com, binthyusuf94@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாத்தின் தூது வாசிப்பிலிருந்தே ஆரம்பமாகியது. முஸ்லிங்களின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் அடித்தளமாக வாசிப்பு மற்றும் நூல்கள் திகழ்ந்தன என்பதற்கு வரலாற்றிலிருந்தே பல சான்றுகள் முன்வைக்கப்படுகின்றன. ஐரோப்பாவின் இருண்ட காலத்தை முஸ்லிங்களின் நூல்களும் நூலகங்களுமே விளக்கேற்றியது என்றால் மிகையாகாது. ஆனால் இன்று முஸ்லிம் பாடசாலை நூலகங்களின் பங்களிப்பு அருகி வருகின்றது.

ஆய்வுப்பிரதேசமான கம்பஹா மற்றும் மினுவாங்கொட கல்வி வலயத்திற்கு உட்பட்ட சில பாடசாலைகளில் உயர்தரம் கற்கும் மாணவர்களுள் நூலகங்களைப் பயன்படுத்துவதில் ஈடுபாடு காட்டுவோரின் அளவை கண்டறிதலையும், நூலகங்களை பயன்படுத்தாது வெறுமனே பாடப்புத்தகங்களோடு மாத்திரம் தம்மை சுருக்கிக்கொள்வதற்கான காரணங்களை இனங்காண்பதையும் மேலும் பரீட்சை மையக்கல்வி மாற்றம் பெற்று முஸ்லிம் சமூகத்தில் பெரும்பான்மையினர் கல்வியியலாளராக, முஸ்லிம் இளம்தலைமுறையினராக மாற வேண்டும் என்பதை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தில் பரீட்சை மையக்கல்வி முன்னுரிமைப்படுத்தப்படுவதும் நூலகங்களின் அவசியம் குறித்து இன்னும் உணர்த்தப்படாமை மற்றும் உணரப்படாமை நூலகத்திற்கான அமைதியான, சிறந்த சூழல் காணப்படாமை, முறையாக பயிற்றுவிக்கப்படாத நூலகர்களின் கவனயீனம்,பொடுபோக்கு போன்ற காரணங்களால் நூலகங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி முன்னேற்றத்தில் பாடசாலை நூலகங்களின் பங்களிப்பு குறைவாக உள்ளது என ஆய்வின் முடிவுகள் காட்டுகின்றன. மேலும் பாடசாலை நூலகப்பயன்பாட்டை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் இவ்வாய்வில் முன்வைக்கப்படடுள்ளன.பண்பு ரீதியானதாவும், எண்ணிக்கை ரீதியானதாகவும் காணப்படும் இவ்வாய்வின் முடிவுகளுக்காக முதலாம் நிலைத்தரவுகளான வினாக்கொத்து,நேர்காணல் மற்றும் அவதானங்கள் என்பவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்** : பாடசாலை நூலகங்கள், கல்வி முன்னேற்றம், நூலகப்பயன்பாடு, மாணவர்களின் வாசிப்பு.

**அறிமுகம்**

கற்றல் எனும் போது எமது சிந்தனைக்கு வருவது பாடசாலை புத்தகங்களே. ஆனால் பாடப்புத்தகங்களையும் தாண்டி விரிந்த ஆழமான எல்லைப்பரப்பை கொண்டதுவே கற்றல் ஆகும். இந்த ஆழமான கற்றலில் நாம் மூழ்குவதற்காக எம்மிடம் இருக்க வேண்டிய அடிப்படை பண்பு வாசிப்பு ஆகும். இதன் பிரகாரம் ''வாசிப்பு ஒரு மனிதனை முழு மனிதனாக்குகின்றது'' என்று கூறப்படுகிறது. அதே நேரம் கற்றலில் வாசிப்பு தொடர்பில் பல ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன அல்லாஹ் தனது திருமறையில் பின்வருமாறு அருளியுள்ளான்:

(நபியே அனைத்தையும் படைத்து உங்களது இறைவனின் திருப்பெயரால் ஓதுவீராக!)(அல்குர்ஆன் 96:01)

மேலும் நபியவர்கள் கூறினார்கள்: ''கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிம்களின் மீது கடமையாகும்''(இப்னு மாஜா 224). இங்கு தலப் என்பது அறிவை தேடுவதையே குறித்து நிற்கின்றது. இங்கு அறிவைத்தேடுதல் பாரிய ஒரு கருத்தை சுமந்து இருக்கின்றது. மேலும் இஸ்லாமிய வரலாற்றில் அப்பாஸிய ஆட்சியிலும் அறிவு பரந்த அளவில் காணப்பட்டது. பல விடயங்களை அறிய வேண்டும் என்பதற்காக முஸ்லிமல்லாத நாடுகளிலிருந்து அறிஞர்கள் டமஸ்கஸ் நகரை நோக்கி வந்தனர். அத்தோடு ரோம்,பாரசீகம் போன்ற மொழிகளிலிருந்து நூற்கள் மொழிபெயர்க்கப்பட்டன. இன்னும் கலீபா ஹாருன் அல் ரஷீத் அவர்கள் தான் கேட்ட நூல் கிடைக்கவில்லை என்பதற்காக உரோம் மன்னனுடன் போர் தொடுக்கவும் முனைந்தார்கள் என வரலாறு கூறுகின்றது.( மேலும் கலீபா ம.்.மூன் அவர்களது காலத்தில்: ''பைத்துல் ஹிக்மா'' என்ற பெயரில் பல எண்ணிக்கை நூற்களைக் கொண்ட ஒரு நூலகம் அமைக்கப்பட்டது. வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் மொழிபெயர்ப்பதற்கும் என்று அழகிய முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்றாக காணப்பட்டது. இவ்வாறு நூல்கள் மற்றும் நூலகங்களுடனான மிக நெருங்கிய தொடர்பும் ஆழமான வாசிப்புக்களுமே அக்காலத்தில் வானியல் அறிவியல்,மருத்துவம்,கணிதவியல் போன்ற பல துறைகளிலும் சிறந்து விளங்கியதோடு குவாரிஸ்மி, இப்னுஸீனா போன்ற மாமேதைகளையும் சிந்தனையாளர்களையும் உருவாக்கியதாக வரலாறுகள் கூறுகின்றன.(பைத்துல் ஹிக்மா பீ அஸ்ருல் அப்பாஸி,1989)

ஆனால் மேற்படி வரலாற்றை சொந்தகாக கொண்டவர்களா ''நாம்'' என்று வியக்கும் அளவிற்கு எமது சமூகத்தின் நிலைப்பாடு மாற்றம் பெற்றுள்ளது.இன்றைய நிலைமையை சீர்செய்வதற்குரிய வீட்டிற்கு அடுத்தபடியபன முதற்தளமாக பாடசாலை நூலகங்களே காணப்படுகின்றன. ஏனெனில் வீட்டுச்சூழலிருந்து வெளியுலகிற்கு குழந்தை பிரவேசிக்கும் முதலாவது இடமாக பாடசாலைகள் காணப்படுவதால் குழந்தையின் வாசிப்புப் பழக்கத்திற்கு அடித்தளமிடும் சிறந்த வாய்ப்பு பாடசாலை நூலகத்திற்கு காணப்படுகின்றது.

மேலும் குறித்த ஒரு பாடம் பற்றிய விரிந்த ஒரு பார்வையை அறிந்து கொள்ளும் பேராவலை மாணவர்களிடத்தில் தூண்டி நூலகத்துடன் இணைத்து விடுபவராக ஆசிரியர்களும் பாடசாலைச்சமூகமும் இருக்க வேண்டும் உதாரணமாக, ஒரு மொழியை கற்பிக்கும் ஆசிரியர் அம்மொழியில் உள்ள இலக்கியங்களை தேடி சுவைக்கும் ஆற்றலை பாடநூலுக்கு அப்பால் குறித்த மாணவர்களை நூலகத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்த முடியும்.

ஆனால் இன்று பரீட்சை மையக்கல்வி போதிக்கப்படுவதும் அதில் 100/100 புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் சிறப்பானவர்களாக திறமைசாலிகளாக கருதப்படுகின்ற நிலையாகவும் மாறிவிட்டது.

மனப்பாடம் செய்தல் கல்வி பெறுதல் அல்ல என்பதையும் அவர்கள் நினைவாற்றலர்களே என்பதையும் தவிர அவர்கள் கல்வியலாளர்கள் அல்ல என்பவை இன்னும் சமூகம் உணரவில்லை. அத்தோடு இவ்வாறான பாடசாலைகளில் நூலகத்தில் காணப்படும் நூல்கள் வேண்டப்படாத சுமைகளாக மாறியுள்ளன. நூலக நூல்கள் கட்டி வைக்கப்பட்டுள்ளன.

‘‘இன்றைய உலகில் ஒரு மனிதன் காலத்தோடு ஒன்றியவனாக இருக்க வேண்டுமாயின் அவன் நாளாந்தம் குறைந்தது நான்கு பத்திரிகைகளையும் வாராந்தம் இரண்டு வார சஞ்சிகைகளையும் மாதாந்தம் ஒரு மாத வெளியீடுகளையும் வாசிக்க வேண்டும்’’(ஆதர் சீக்கிளாக் 2007) இதற்கு மாற்றமாக இன்றைய மாணவர்கள் எத்தகு வரலாற்றறிவும் சமூக நடப்புகளும் உலக அறிவுப்பரப்பும் அறியாப்போலிப்படிப்பாளிகளாக வளர்த்தெடுக்கப்படுகின்றனர்.

ஆகவே எம் இளம் தலைமுறை சிறந்த கல்வியியலாளராக பல்வேறு துறைகளிலும் ஆற்றல் கொண்டவராக தடம்பதிக்க பாடசாலை நூலகங்களது பங்களிப்பு அவசியம் என்பதை முன்னிறுத்தி முஸ்லிம் பாடசாலை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் பாடசாலை நூலகங்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வுப்பிரச்சினை:**

கம்பஹா மற்றும் மினுவாங்கொட கல்வி வலயங்களுக்கு உட்பட்ட சில குறிப்பிட்ட பாடசாலைகளின் கல்வி ஒப்பீட்டு ரீதியில் பாடசாலைப் பாடத்திட்டங்களை மாத்திரமே கொண்டதாக கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

மேலும் பாடசாலை மாணவர்கள் வெறுமனே பாடத்திட்டத்தினை மாத்திரமே நோக்காகக் கொண்டு கற்பதனால் அரச மற்றும் தனியார் போட்டிப் பரீட்சைகளின் போது பெரும்பாலான மாணவர்கள் பல சவால்களை எதிர்நோக்கிக்கொண்டிக்கின்றனர். இவ்வாய்வாய்வுப்பிரச்சினையை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

- கம்பஹா மற்றும் மினுவாங்கொட கல்வி வலய முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி முன்னேற்றத்தில் பாடசாலை நூலகங்களின் பங்களிப்பை கண்டறிதல்.
- முஸ்லிம் பாடசாலைகளுக்கு மத்தியில் நூலகப்பயன்பாட்டின் அவசியத்தை உணர்த்துதல்.
- பாடசாலை நூலகங்களைப்பயன்படுத்த முடியாமைக்கான காரணங்கள் மற்றும் சவால்களை இனங்காணல்.

**ஆய்வு வினாக்கள்**

- கம்பஹா மற்றும் மினுாவாங்கொட கல்வி வலய முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி முன்னேற்றத்தில் பாடசாலை நூலகங்களின் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகிறது?
- குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் மாணவர்கள் பாடசாலை நூல்களைப் பயன்படுத்துவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?

**இலக்கிய மீளாய்வு:**

இத்தலைப்பைப் பொருத்தவரையில் பெருமளவில் ஆய்வுகள் செய்யப்படாத போதிலும் பல கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அஷ்ஷெய்க்.M.I.M.ஸுபைர் அவர்களால் இஸ்லாமிய சிந்தனை சஞ்சிகையில் (ஜனவரி 1994 இதழ் 02) ''நூலகங்களின் வளர்ச்சிக்கு முஸ்லிங்களின் பங்களிப்பு'' எனும் தலைப்பில் முஸ்லிங்களின் அறிவியல் துறையில் அவர்களது அறிவு வளர்ச்சி எவ்வாறு சிறப்பாகக் காணப்பட்டது எனவும் மேலும் அவர்களது பங்களிப்புக்கள் இன்றியமையாதவை பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

பர்ஹான் மன்சூர் அவர்களால் வைகறை எனும் சஞ்சிகையில்(டிசம்பர் இதழ்35 2017) எழுதப்பட்ட கட்டுரையில் ''பாடசாலை நூலகங்கள்'' என்ற தலைப்பில் பாடசாலை நூலகங்கள் இன்றைய காலத்தின் தேவையாக காணப்படுகின்றன என்ற விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்தாத் பஸர் என்பவரால் வைகறை சஞ்சிகை(2018) ''இஸ்லாமிய வரலாற்றில் நூலகங்களும் வாசிப்பும்'' என்கின்ற தலைப்பில் இஸ்லாமிய வரலாற்றில் செழித்துக்காணப்பட்ட வாசிப்பு தற்போது மழுங்கி செல்கிறது எனவே அதனை ஆர்வப்படுத்துவதை நோக்காகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டிருந்தது.

அகவிழி எனும் சஞ்சிகையில்(ஒக்டோபர் 2008) திரு.ம.இராசதுரை அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையில் ''பாடசாலை நூலகங்களும் ஆசிரிய நூலகர்களும்'' என்ற தலைப்பில் இன்றைய கால பாடசாலை நூலகங்களின் நிலைப்பாடு பற்றியும் அதனை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் எவை என்பது பற்றியும் அத்தோடு நூலக ஆசிரியர்களின் பங்களிப்பு பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

மேலும் அகவிழி எனும் சஞ்சிகையில் (ஒக்டோபர் 2009) அ.ஸ்ரீ காந்தலட்சுமி அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையில் ''பாடசாலை நூலகங்கள் புதுயுகம் தரும் பெரும் பொறுப்புகள்'' எனும் தலைப்பில் நூலகங்கள் எவ்வாறு நவீனமயப்படுத்தப்பட வேண்டும் எனவும் மேலும் புதுயுகத்திற்கு ஏற்றவாறு பரிமாணங்களை உள்வாங்க வேண்டும் எனவும் வழிகாட்டப்பட்டுள்ளன.

உண்மை உதயம் சஞ்சிகையில் (மே 2018) M.S.M. ஹில்மி அவர்களால் எழுதப்பட்ட ''புத்தகம் ஓர் அறிவியல் ஆயுதம்'' என்ற தலைப்பில் வாசிப்பு, நூல்களின் அவசியம் மற்றும் வாசிப்பின் மூலமே நூல்கள் உருவாகியன என்பன குறித்து பேசப்பட்டன.

சி.சரவணன் அவர்களால் எழுதப்பட்டு (மே 02 2017) இணையத்தளத்தில் வெளியான ''நூலகரும் மாணவரும்'' என்ற கட்டுரையில் நூலகர்களுக்கும் மாணவர்களுக்குமிடையிலான தொடர்பினை குறிப்பிட்டள்ளார்.

ஜனூான் அவர்களால் எழுதப்பட்டு (நவம்பர் 05 2009) இணையத்தளத்தில் வெளியான ''பாடசாலைகளில் நூலங்கள்'' என்ற கட்டுரையில் கல்வி மற்றும் நூலகம் பற்றிய தொடர்பை தெளிவுபடுத்தியுள்ளார்.

**ஆய்வு முறையியல்**


குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசமான கம்பஹா மற்றும் மினுவாங்கொட கல்வி வலயங்களின் முஸ்லிம் பாடசாலைகளின் உயர்தர மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் நூலகங்களின் பங்களிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை சிறப்பாக எடுத்துச் செல்ல காரணமாகவுள்ள தரவு முறையிலானது ஆய்வின் முக்கிய பகுதியாக உள்ளது. இங்கு தரவுகளின் வகை தரவு சேகரிக்கும் முறை தரவு பகுப்பாய்வு முறை என்பன இவ்வாய்வின் முக்கிய அம்சங்களாகும். இவ்வாய்வுக்கு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரகள் அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன.இதனுள் அளவு மற்றும் பண்பு ரீதியான தரவுகள் உள்ளடக்கப்பட்டன.

இவ்வாய்வை மேற்கொள்ள எழுமாறாக சுமார் 70 மாணவர்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன.அத்தோடு பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து நேர்காணல் மற்றும் அவதானிப்பு முறைகள் மூலம் பண்பு ரீதியான தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டள்ளது.

**தரவுப்பகுப்பாய்வும் பெறுபேறுகளும்**

குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசமான கம்பஹா மற்றும் மினுவாங்கொட கல்வி வலயங்களை உட்படுத்திய முஸ்லிம் பாடசாலைகளின் நூலகங்களின் பங்களிப்பு பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 05 பாடசாலைகள் உட்டபடுத்தப்பட்டன.அவற்றில் உயர்தர கலைப்பிரிவு மாணவர்களை மையப்படுத்தியதாக சுமார் 70 மாணவர்கள் இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்டனர். இவற்றினூடாக அதிக பயன்பாடு உடையோர்கள் உயர்தர மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


நூலகத்தைப்பயன்படுத்தல், அதற்கான சூழல் மற்றும் நூலக உறுப்பினராக இருத்தல் போன்ற நிலைப்பாடு பற்றி வினாக்கொத்தினூடாக வினவப்பட்ட போது அவர்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்தினூடாக பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவர்களில் அதிகமானோர் அதிருப்தி நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர் அவற்றில் ஒரு சிலரே திருப்தி நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர் என்பதை பின்வரும் வரைபு 01 சுட்டிக்காட்டுகின்றது.(வரைபடம் -01)




வரைபடம் 01

மேற்கூறப்பட்ட வரைபு 01 ஐ நோக்கும் போது குறித்த ஆய்வில் தெரிவு செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் உறுப்பினராக காணப்பட்டிருந்த போதிலும் போதியளவான நூலகப்பயன்படுத்தலின்மையும் அதற்கான சூழலின்மை போன்றவற்றை அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும் குறிப்பிட்ட பாடசாலைகளின் நூலகங்களில் காணப்படும் நூல்களின் தொகையைப் பொருத்த வரையில் மாணவர்களுக்கு தேவையான நூல்களின் அளவு போதியதாக காணப்படுகின்றன என்பது பற்றி உடன்பாடு செலுத்திய வீதம் இனங்காணப்பட்ட போது : (அட்டவணை 01 ஐப் பார்க்க)




இதனடிப்படையில் அட்டவணை 01 இல் நூலகங்களில் காணப்படும் நூல்களின் வீதம் ஓரளவு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக காணப்படுவதோடு அதேவேளை இன்னும் சில பாடசாலை நூலகங்களில் போதியளவு நூல்கள் காணப்படவில்லை என்பதும் தெளிவாகின்றது.

மேலும் பாடசாலை மாணவர்கள் கல்வி செயற்பாட்டில் அபிவிருத்தி செய்வது தொடர்பில் அவர்களது நூலகப்பயன்பாடு எவ்வாறு காணப்படுகின்றது என்பது பற்றி அறிய வினாக்கொத்தினூடாக பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில்: (அட்டவணை 02 ஐப் பார்க்க).

| **தடவைகள்** | **தினமும்** | **வாரம் ஒருமுறை** | **மாதம் ஒருமுறை** | **வேறு** |
|---|---|---|---|---|
| **மாணவர்கள் எண்ணிக்கை** | 12 | 38 | 6 | 14 |

அட்டவணை - 02

குறிப்பிட்ட ஆய்வுக்கு உட்படுத்திய 70 மாணவர்களுள் நூலகத்திற்கு வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கையை கணக்கீடு செய்த போது தினமும் நூலகம் செல்லும் மாணவர்கள் 12 பேர் என்றும், வாரம் ஒருமுறை நூலகம் செல்வோர் 38 மாணவர்கள் என்றும், மாதமொருமுறை நூலகம் செல்வோர் 6 மாணவர்கள் இன்னும் சிலர் வேறுவகையான தடவையில் நூலகம் செல்வோர் 14 மாணவர்கள் என்றும் அவர்களிடம் பெறப்பட்ட முடிவாகும்.எனினும் இவற்றினூடாக வாரமொருமுறை செல்வோரின் எண்ணிக்கையே அதிகமானதாகவும் தினமும் செல்வோரின் எண்ணிக்கை குறைவாகவும் காணப்படுகின்றது. இதன் மூலம் மாணவர்கள் மத்தியில் நூலகப்பயன்பாடு அரிதாகவே காணப்படுவதை இனங்காணலாம்.


மேலும் அவர்கள் நூலகத்திற்காக செலவிடும் நேரங்கள் பற்றி ஆய்வு செய்த போது அவர்கள் ஒரு நாளைக்கு குறிப்பிட்ட சில மணித்தியாலங்கள் மற்றும் அதை விட குறைவான நேரங்களையே செலவிடுகின்றனர் என்பது அவர்களது வினாக்கொத்தினூடாக பெறப்பட்ட தகவலாகும்.(அட்டவணை 03 ஐப் பார்க்க.)

| **நூலகத்தை பயன்படுத்தும் நேரங்கள்** | **மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| **1-2 மணித்தியாலங்கள்** | 42 |

| | |
|---|---|
| **2-4 மணித்தியாலங்கள்** | - |
| **4-6 மணித்தியாலங்கள்** | - |
| **6-8 மணித்தியாலங்கள்** | - |
| **வேறு நேரங்கள்** | 23 |

அட்டவணை - 03

மேலும் இன்னும் சிலர் தாம் நூலகத்தை பயன்படுத்துவதே இல்லை எனவும் குறிப்பிட்டனர்.அதே போன்று வேறு நேரங்கள் எனக்குறிப்பட்ட போது அவர்கள் ஒரு மணித்தியாலத்தை விடவும் குறைவான நேரத்தையே பயன்படுத்துகிறார்கள் என வினாக்கொத்தினூடாக அறியப்படுத்தினர். மேலும் எவ்வகையான நூலகப்பயன்பாட்டை நாடுகின்றனர் என அறியப்பட்ட போது அவர்களின் தரவுகளின் அடிப்படையில் : (வரைபடம் - 02 ஐப் பார்க்க.)




வரைபடம் 02

இவற்றினூடாக மாணவர்களின் வாசிப்பு பழக்கமானது அவர்கள் குறைவான வீதமே நூல்களை வாசிப்பவர்களாகவும் மேலும் ஏனைய விடயங்களுக்கே அதிக ஈடுபாடு காட்டுபவர்களாகவும் காணப்படுகின்றனர். அதே போன்று நூல்களின் அடிப்படையில் நோக்கும் போது மாணவர்கள் பாடத்திட்ட நூல்களை மாத்திரம் சுருக்கிக் கொள்பவராக காணப்படுகின்றனர்.இன்னும் குறிப்பிட்டு எண்ணக்கூடிய சிலரே பாடப்புத்தகங்கள் தவிர்ந்து மேலதிக வாசிப்பைக்கொண்டிருக்கின்றவர்கள், அரிதானவர்களே என்பதும் குறிப்பிடத்தக்கது.இவற்றினடிப்படையில் மாணவர்கள் நூலகப்பயன்பாடு பற்றிய மந்தமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

மேலும் பாடசாலை மாணவர்களிடத்தில் அவர்களது பாடசாலை நூலகங்களைப் பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி வினவியபோது அவர்கள் முன்வைத்த சவால்களில் குறிப்பான சில பின்வருமாறு:

- நூலகத்தின் ஒழுங்கமைப்பில் காணப்படும் சில இடர்பாடுகள்.
  (குறிப்பிட்ட பாடசாலைகளில் காணப்படும் நூலகங்களின் சில பகுதிகள் வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன.உதாரணம் :ஆசிரியர் அறை)

- போதியளவு நூல்கள் பாடசாலை நூலகங்களில் காணப்படாமை.

(மாணவர்களின் தேவைக்கேற்ற வகையில் புத்தகங்களின் எண்ணிக்கை போதாமையினால் கற்றல் செயற்பாடுகளில் சிரமங்களை எதிர் கொள்ளல்.)

- பாடவேளைகளின் நெருக்கடியினால் நூலகப்பயன்பாட்டிற்கு நேரம் போதாமை. (மாணவர்களின் பாடவேளைகளில் நூலகத்திற்கான நேரம் ஒதுக்கப்படாமல் இருத்தல் மேலும் நூலகப்டபாடவேளையைப் உரிய முறையில் பயன்படுத்தாமை.)

- பாடசாலையின் நிர்வாகக் கட்டுப்பாடும் அதன் ஒழுங்கீனமும்.(பாடசாலை நூலக மற்றும் நூலகர்களின் கவனயீனமான செயற்பாடுகள் காணப்படுவதோடு நூலகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு முறையாக நடைபெறுவதில்லை.)

- முறையான நூலகர்கள் பயிற்றுவிக்கப்படாமை. (நூலகம் பற்றிய போதிய அறிவுடையோரை நியமிக்க தவறுதல்.)

- அதே போன்று நூலகத்தினரிடமிருந்து நூல்களைப்பெறுவதில் தாமதம். (நூலகத்திடமிருந்து நூல்களை தமது தேவைக்காக பெற்றுக் கொள்வதற்கு நேரவிரைவு, தாமதமாதல் போன்ற சிரமங்களை எதிர்கொள்ளல்.)

போன்ற சவால்களை அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். மேற்கூறப்பட்ட யாவும் ஆய்விற்காக கொடுக்கப்பட்ட வினாக்கொத்துக்களினூடாக பெறப்பட்ட தகவல்களாகும்.

**முடிவுரை**

ஆய்வுப்பிரதேசமான கம்பஹா மற்றும் மினுவாங்கொட கல்வி வலயங்களுக்குட்பட்ட குறிப்பிட்ட முஸ்லிம் பாடசாலைகளின் நூலகங்களைப் பொருத்த வரையில் இலங்கை அரசாங்கம் பாடசாலை நூலகத்தின் வளர்ச்சிக்காக பல வழிகளை மேற்கொள்வதோடு வருடாவருடம் புதிய நூற்களையும் வழங்குவதற்கான பணங்களையும் ஒதுக்கீடு செய்கின்றது.அத்தோடு நூலகர்களுக்கான பயிற்சிகளையும் வழங்குகிறது.

என்றாலும் சில குறிப்பிட்ட பாடசாலைகளில் காணப்படும் நூலகங்கள் பெயரளவிலே காணப்படுகின்றன என்பது கவலைக்குரிய விடயமாகும். வெறுமனே பாடப்புத்தகங்களை நோக்காகக் கொண்டு சுருக்கப்பட்ட கல்வி நிலைமையே காணப்படுகின்றது. மேலும் மாணவர்கள் பரீட்சையை மையப்படுத்தி தயார் படுத்தப்படுவதால் நூலகங்களுடன் அவர்களை இணைப்பை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டல்களும் விரிந்த சிந்தனையாளர்களாக அவர்களை மாற்றுவதற்கான சந்தர்ப்பங்களும் குறைவாகவே காணப்படுகின்றன. ஆகவே இந்நிலமையை உணர்த்துவதற்கான ஓர் முயற்சியாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆலோசனைகளும் பரிந்துரைகளும்**

மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகளின் படி குறிப்பிட்ட பாடசாலைகளில் காணப்படும் நூலகங்களை சிறப்பாக பயன்படுத்துவதற்கு பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

- ✓ நூலகமும் கல்வியும் ஒன்றுக்கொன்று இணையான விடயங்கள் என்ற எண்ணக்கரு மாணவர்களிடம் விதைக்கப்பட வேண்டும்.

மேலும் ஒரு சிறந்த கல்வி நிலையமானது கற்கும் மாணவனுக்கு பலவற்றையும் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாணவர்களை அறிஞர்களாக ஆக்குவதில் வகுப்பறைக்கு இணையானது நூலகம் என்ற ஆணித்தரமான கருத்தை மாணவர்களிடத்தில் விதைக்க வேண்டும்.பாடநூல்கள் கற்க வேண்டியவற்றின் ஒரு பகுதியை மட்டுமே சுட்டிக்காட்டும் ஏனைய பகுதிகளையும் கண்டறிய மாணவனுக்கு துணைநல்குபவனே ''இணைப்படிப்புக்கள்'' தாம் என்று ஆசிரியர் மாணவனுக்கு தெளிவுபடுத்த வேண்டும். பள்ளிக்கல்வியில் இணைக்கல்வி என்பது முதன்மையாக நூலகக் கல்வியைக் குறிப்பிடும்.

- ✓ மாணவர்களின் பாடவேளையில் நூலகத்திற்கென்று ஒரு பாடவேளை ஒதுக்கப்பட்டு மாணவர்களை கட்டாயமாக வாசிக்கத் தூண்டுதல்.
- ✓ நூலகச்சூழல் அமைதியாகவும், அழகாகவும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் மேலும் அங்கு சுவர்ப்பத்திரிகை ஒன்று பொருத்தப்பட்டிருத்தல் சிறந்தது.
  நூலகங்களை மாணவர்களின் மனதை கவரும் விதமாக காணப்படுவதோடு சுவர்ப்பத்திரிகை போன்றவை காட்சிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
- ✓ மாணவர்கள் தாம் வாசித்த ஒரு சில கருத்துக்களையாவது சுவர்ப்பத்திரிகைகளில் ஆக்கங்களாக இடுவதற்கும் முன்மொழிவதற்கும் வழிகளை ஏற்படுத்திக்கொள்ளல். அவர்களது எழுத்தாற்றலை வளர்ப்பதோடு மேலும் தேடல் செயற்பாடுகளில் ஆர்வமூட்டல்.
- ✓ மேற்படி நூல்களை அதிகமாக பயன்படுத்தியோர் அதிக நூல்களை வாசித்தோருக்கு ஊக்குவித்தல் பரிசு வழங்கல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**உசாத்துணைகள்**


- அபூ அப்னான்.(2010). விஞ்ஞான அறிவியல் வளர்ச்சிக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு,உண்மை உதயம் -55,(இதழ் -153).
- இம்தாத் பஸர்.(2013).இஸ்லாமிய வரலாற்றில் நூலகங்களும் வாசிப்பும்,வைகறை சஞ்சிகை,(ஒகஸ்ட்-ஒக்டோபர், இதழ்:31).
- செல்வராஜா,என்.(2014).பாடசாலை நூலகங்களும் எமது சமூகத்தின் வாசிப்புத் திறனும்:http://thesamnet.co.uk/2016.
- பர்ஹான் மன்ஸூர்.(2012). இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியத்தில் நூலகங்கள்.:https://lankamuslim.org/2016
- பர்ஹான் மன்ஸூர்.(2016).பாடசாலை நூலகம். வைகறை சஞ்சிகை.
- நாளிர்,எம்.எச்.எம்.(2010),முஸ்லிங்கள் வளர்த்த அறிவியல் கலை,வைகறை சஞ்சிகை,(ஜனவரி-மார்ச் இதழ் :17).
- இராசதுரை,ம.(2008).பாடசாலை நூலகங்களும் ஆசிரிய நூலகர்களும். அகவிழி சஞ்சிகை.(ஒக்டோபர்)
- ஸுபைர்,எம்.ஐ.எம்.(1994).நூலகங்களின் வளர்ச்சிக்கு முஸ்லிங்களின் பங்களிப்பு. இஸ்லாமிய சிந்தனை சஞ்சிகை, (ஜனவரி -மார்ச்,மலர்:16)
- ஜனூான்.(2009),பாடசாலைகளில் நூலகங்கள்,தினகரன் இணையப் பதிப்பு,எழுகதிர் வெளியீடு:archives.thinakaran.lk/2009.(06.11.2009).
- ஹலர் முஹம்மத் அதாஉல்லா,(1989).பைத்துல் ஹிக்மா பீ அஸ்ரில் அப்பாஸி.தாருல் பிக்ருல் அறபி.கெங்ரோ.

- ஹில்மி,எம்.எஸ்.எம் (2018) புத்தகம் ஓர் அறிவியல் ஆயுதம். இலங்கை:உண்மை உதயம்
- ஸ்ரீ காந்தலட்சுமி,அ. (2009).புதுயுகம் தரும் பெரும் பொறுப்புகள்.அகவிழி. (ஒக்டோபர்):kanthaluxmy.blogspot.com